


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ மே. 17, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 222 ❖ ரூ.10

### அமைச்சரவையிலிருந்து செந்தில்பாலாஜி, செஞ்சி மஸ்தானை நீக்க வேண்டும்

# வலியுறுத்தல்

## தமிழகம் முழுவதும் கள்ளச்சாராயம் ஆறாக ஓடிக்கொண்டிருப்பது. அரசு மேற்கொண்ட சோதனைகள், கைது நடவடிக்கைகளிலும் தெரிகின்றது: பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை

சென்னை, மே. 17-

"டாஸ்மாக்மூலம்தமிழக சகோதரிகளின் தாலியைப் பறிப்பது போதாதென்று, கள்ளச் சாராய விற்பனைக்கும் துணை செல்லும் அமைச்சர்கள் செந்தில்பாலாஜி மற்றும் செஞ்சி மஸ்தான் ஆகிய இருவரையும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உடனடியாக அமைச்சர் பதவியிலிருந்து நீக்க வேண்டும்" என்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மரக்காணம் அருகே கள்ளச் சாராயத்திற்கு 19 உயிர்கள் பலியாகியிருக்கின்றன. முப்பதுக்கும் அதிகமானோர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். செங்கல்பட்டு மாவட்டத்தில், கள்ளச்சாராயத்திற்குப் பலியானவர்களை, அவர்கள் குடும்பத்தினருக்குக் கூடத் தெரியாமல் காவல்துறையே அடக்கம் செய்த அவலமும் நிகழ்ந்துள்ளது.

இந்த துயரச் சம்பவம் நடந்து முடிந்த பின்னரே, தமிழகம் முழுவதும் 1558 கள்ளச்சாராய வியாபாரிகளை கைது செய்து,பலஆயிரம்லிட்டர் கள்ளச்சாராயத்தைப் பறிமுதல் செய்திருக்கிறது தமிழக காவல்துறை. இத்தனை கள்ளச்சாராய வியாபாரிகளின் விவரங்கள் தெரிந்திருந்தும், கள்ளச்சாராயம் விற்பவர்கள் யார், விற்பனைஎங்கேநடக்கிறது என்று தெரிந்திருந்தும், நடவடிக்கை எடுக்காமல் இத்தனை நாட்கள் அனுமதித்துவிட்டு, தற்போது கண்துடைப்புக்காக கைது நடவடிக்கைகள் மேற்கொள்வது வெட்கக்கேடு. யாரை ஏமாற்ற முயற்சிக்கிறது தமிழக அரசு?

மரக்காணம் துயரச் சம்பவத்தில், மரூர் ராஜா எனும் சாராய வியாபாரியின் பெயர் வெளியிடப்பட்டிருக்கிறது. திமுகவைச் சேர்ந்த இவர், திண்டிவனம் 20வது வார்டு நகர மன்ற உறுப்பினர் ரம்யா ராஜா என்பவரின் கணவர். சாராய விற்பனையில் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வரும் அவர் மீது பல்வேறு வழக்குகள் இருக்கின்றன. 2018ம் ஆண்டிலேயே சாராய விற்பனை தொடர்பாக இவர்மேல் வழக்கு இருந்து வருகிறது. அதுபோக, பல்வேறு குற்ற வழக்குகளும் இவர் மேல் இருக்கின்றன.

இந்த மரூர் ராஜா அமைச்சர் செஞ்சி மஸ்தானுக்கு மிக நெருக்கமானவர். தொடர்ந்து பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்டாலும், அமைச்சரின் செல்வாக்கால், பெரிய அளவில் நடவடிக்கை இல்லாமல் தனது சாராய விற்பனையைத் தொடர்ந்து வந்திருக்கிறார். கடந்த ஏப்ரல் மாதம், காரில் சாராயம் கடத்திய வழக்கில் இவர் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். எனினும், அமைச்சரின் நெருக்கத்தால், சிறையில் இருந்தபடியே தொடர்ந்து சாராய விற்பனையில் ஈடுபட்டு வருகிறார் என்றும் தெரிய வருகிறது.

சமூகவலைதளங்களில் திமுகவை விமர்சித்தால் உடனே குண்டாஸ் நடவடிக்கை எடுக்கும் திமுக அரசு, பல்வேறு குற்றவழக்குகள் இருந்தும், மரூர் ராஜா மேல் இதுவரை குண்டாஸ் நடவடிக்கை எடுக்காமல் இருக்க என்ன காரணம்? அமைச்சர் செஞ்சி மஸ்தானுடனான நெருக்கமா? ஒரு சாராய வியாபாரியை, அமைச்சர் செஞ்சி மஸ்தான் பாதுகாத்து கொண்டிருக்கிறாரா?

தமிழகம் முழுவதும் கள்ளச்சாராயம் ஆறாக ஓடிக்கொண்டிருப்பது. அரசு மேற்கொண்ட சோதனைகளில் கைப்பற்றப்பட்ட சாராயத்தின் அளவிலும், 1558 சாராய வியாபாரிகள் கைதுநடவடிக்கைகளிலும் வெளிப்படையாகியிருக்கிறது. இத்தனை நாட்களாக நடந்து வரும் கள்ளச் சாராய விற்பனை அனைத்தும், அரசுக்கும் காவல்துறைக்கும், தெரியாமல் நடந்திருக்க வாய்ப்பில்லை. கள்ளச்சாராய விற்பனையைத் தடுத்து நிறுத்துவது, மதுவிலக்குத் துறையின் முக்கிய பொறுப்பாகும். ஆனால், அந்த துறைக்குப் பொறுப்பான சாராய அமைச்சர் செந்தில்பாலாஜிக்கு தெரியாமல் இத்தனை அதிகமான அளவில் கள்ளச் சாராய விற்பனை நடந்திருக்குமா என்பதும் கேள்விக்குறி.

கள்ளச் சாராய விற்பனை குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டியதுறைஅமைச்சர் செந்தில்பாலாஜி, போக்குவரத்து துறையில் லஞ்சம் வாங்கிய வழக்கில், உச்ச நீதிமன்றத் தீர்ப்பு நேற்று காலை வருவதாக இருந்த நிலையில், சம்பவ இடத்துக்கே வரவில்லை. ஊழல் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் அவர்மேல் வழக்குப்பதிவு செய்ய, தமிழக காவல்துறைக்கு உச்ச நீதிமன்றம் ஆணையிட்டிருக்கிறது. செந்தில்பாலாஜி அமைச்சர் பதவியில் தொடரும் தார்மீக உரிமையை இழந்துவிட்டார்.


அமைச்சர் செந்தில்பாலாஜி மற்றும் அமைச்சர் செஞ்சி மஸ்தான் இருவரும், கள்ளச் சாராய விற்பனை குறித்து அறிந்திருந்தும், குற்றவாளிகளைப் பாதுகாக்கும் நோக்கிலேயே செயல்பட்டு வந்திருக்கிறார்கள். அல்லது தங்கள், அமைச்சர் பதவிக்கான பொறுப்புகளிலிருந்து தவறியிருக்கிறார்கள். ஏற்கெனவே, டாஸ்மாக் மூலம் தமிழக சகோதரிகளின் தாலியைப் பறிப்பது போதாதென்று, கள்ளச்சாராய விற்பனைக்கும் துணை செல்லும் இவர்கள் இருவரையும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உடனடியாக அமைச்சர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று தமிழக பாஜக சார்பில் வலியுறுத்துகிறேன்.

அரசின் அலட்சியத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகளையும், தாய்மார்களின் கண்ணீரையும் வெறும் இழப்பீடு கொடுத்து சரிசெய்துவிடலாம் என்று முதல்வர் நினைத்தால், அது மிகவும் தவறான போக்காகும். மீண்டும் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கத் தவறினால், தமிழகம் முழுவதும் போராட்டம் நடத்தவும்பாஜகதயங்காது என்று எச்சரிக்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

## இலுப்பூரில் நடந்த ராஷ்ட்ரீய ஸ்வயம்சேவக சங்கத்தின் பயிற்சி முகாம் நிறைவு

இலுப்பூர், மே. 17-

இலுப்பூரில் நடந்த ராஷ்ட்ரீய ஸ்வயம்சேவக சங்கத்தின் பயிற்சி முகாம் நிறைவுபெற்றது.



இலுப்பூர் ராஜராஜேஸ்வரி டவுண்சிப் வளாகத்தில் கடந்த 02-05-2023 முதல் 15 நாட்கள் ராஷ்ட்ரீய ஸ்வயம்சேவக சங்கத்தின் பண்புப் பயிற்சி முகாம் நடந்தது. இந்த நிகழ்ச்சியில் தமிழகம் முழுவதும் இருந்து 41-65 வயதுக்குட்பட்டவர்கள் 211 பேர் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

இவர்களுக்குவிளையாட்டு யோகா, சிலம்பம், பாரத வரலாறு, இந்து மதத்தின் கோட்பாடுகள், இந்துமத மகான்கள், ஆர்.எஸ்.எஸ். அமைப்பு சமுதாயத்தில் ஏற்படுத்தியுள்ள விழிப்புணர்வு அரும்பணிகள், அதன் லட்சியம், கடந்து வந்த பாதை ஆகியவை குறித்து ஆர்.எஸ்.எஸ் பொறுப்பாளர்கள் 50 பேர் பயிற்சி அளித்தனர். இதன் நிறைவு நிகழ்ச்சியாக, நேற்று முகாமில் பயிற்சி பெற்றவர்கள் பொதுமக்கள் முன்னிலையில் தாங்கள் பெற்ற பயிற்சிகளான யோகாசனம், சிலம்பம், அணிவகுப்பு, விளையாட்டுக்கள், ஆகியவற்றை செய்து காட்டினர்.

இந்நிகழ்ச்சிக்கு சண்முகநாதன் (தொழிலதிபர்) தலைமை தாங்கினார், முகாம் செயலாளர் ஈரோடு ஜெகதீசன், முகாம் அறிக்கை வாசித்தார். புதுகோட்டை மாவட்ட இணைச்செயலாளர் கணேஷ்பாபு வரவேற்புரையாற்றினார். ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் அகிலபாரத செயலாளர் ரவீந்திர ஜோசி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். ஆர்.எஸ்.எஸ், தென் தமிழக அமைப்பாளர் ஆறுமுகம் சிறப்புரையாற்றினார்.

வரவேற்புக்குழு தலைவர் தகரம்சிங் சர்மா, மற்றும் உள்ளூர் பிரமுகர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் இறுதியாக இராமேஸ்வர கோட்ட செயளாலர் பி.கே. நாகராஜன் நன்றி கூற சங்கப் ப்ரார்த்தனையுடன் விழா இனிது நிறைவுற்றது.

## 16 மாவட்டங்களின் கலெக்டர்களை பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவு

சென்னை, மே. 17-

தமிழகத்தில் புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்ட கலெக்டர்கள் உள்ளிட்ட ஐஏஎஸ் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.



சிவகங்கை, திருப்பூர், தஞ்சை, நாகை, தூத்துக்குடி, கடலூர், அரியலூர், ஈரோடு, புதுக்கோட்டை, காஞ்சிபுரம், நாமக்கல், திண்டுக்கல், மதுரை, கிருஷ்ணகிரி, ராமநாதபுரம், செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர்கள் பணியிட மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

நாகை ஆட்சியர் அருண் தம்புராஜ், கடலூர் ஆட்சியராக நியமனம். அரியலூர் ஆட்சியராக அன்னீ மேரி ஸ்வர்னா, கிருஷ்ணகிரி ஆட்சியர் தீபக் ஜேகப், தஞ்சை ஆட்சியராக நியமனம். புதுக்கோட்டை ஆட்சியராக மெர்சி ரம்யா, நாமக்கல் ஆட்சியராக உமா, காஞ்சி ஆட்சியராக கலைச்செல்வி மோகன், செங்கல்பட்டு ஆட்சியராக கமல் கிஷோர், மதுரை ஆட்சியராக சங்கீதா, சிவகங்கை ஆட்சியராக ஆஷா அஜித், ராமநாதபுரம் ஆட்சியராக விஷ்னு சந்திரன், தூத்துக்குடி ஆட்சியராக ராகுல்நாத், திருப்பூர் ஆட்சியராக கிருஸ்துராஜ், ஈரோடு ஆட்சியராக ராஜ கோபால் சுங்கரா, திண்டுக்கல் ஆட்சியராக பூங்கொடி, நாகை ஆட்சியராக ஜானி டாம் வர்கீஸ், கிருஷ்ணகிரி ஆட்சியராக சராயு ஆகியோர் நியமனம் செய்யப்படுவதாக தமிழக அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## குற்றவாளிக்கு ரூ.50,000 நிவாரணம் வழங்கும் 'கோமாளித்தன' திமுக அரசு இபிஎஸ் கடும் விமர்சனம்

சென்னை, மே. 17-

"போலி மதுபான வழக்கில் முதல் குற்றவாளியாக சேர்க்கப்பட்ட அம்மாவாசைக்கு இந்த அரசு அதை போலி மதுபானத்தால் பாதிக்கப்பட்டவருக்கு வழங்கப்படும் 50 ஆயிரம் நிவாரணம் வழங்கி இருக்கிறது. இதுதான் நவீன திராவிட மாடல் ஆட்சி போலும்" என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.



இது தொடர்பாக அவர் தனது சமூகவலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "செங்கல்பட்டு மாவட்டம் சித்தாமூரில் கள்ளச்சாராயம் குடித்து பலரும் உயிரிழந்துள்ள நிலையில், அதற்கு காரணமானவர் என்று இந்த அரசு வழக்கு பதிவு செய்துள்ள அம்மாவாசை என்பவர் திமுக ஒன்றிய கவுன்சிலர் நாகப்பன் என்கிறவருடைய தம்பி ஆவார். குற்றம் சாட்டப்பட்டுள்ள அம்மாவாசை தானும் அந்த மதுபானத்தை அருந்தியதாக அவரும் மருத்துவமனையில் தன்னை அனுமதித்துக் கொண்டார்.

இந்நிலையில், போலி மதுபான வழக்கில் முதல் குற்றவாளியாக சேர்க்கப்பட்ட அம்மாவாசைக்கு இந்த அரசு அதை போலி மதுபானத்தால் பாதிக்கபட்டவருக்கு வழங்கப்படும் 50 ஆயிரம் நிவாரணம் வழங்கி இருக்கிறது. இதுதான் நவீன திராவிட மாடல் ஆட்சி போலும். சில நாட்களுக்கு முன்னாள் ஒருவர் தன்னை மாற்றுத்திறனாளி இந்திய கிரிக்கெட் கேப்டன் என்று பொய் சொல்லி முதல்வரை சந்தித்து ஒருவர் பரிசு பெற்று செல்கிறார் தற்போது என்னவென்றால் கள்ளச்சாராயம் காய்ச்சி உயிரைப் பறித்தவருக்கு அவரின் செயலை பாராட்டி பரிசு கொடுப்பது போல் நிவாரணம் கொடுக்கப்படுகிறது. இந்தியாவிலேயே, ஏன் இந்த உலகத்துலேயே குற்றவாளிக்கு நிவாரணம் வழங்குகின்ற கோமாளித்தனமான ஒரே அரசு தற்போது ஆட்சியிலுள்ள திமுக அரசு தான்.

நிர்வாக திறன் அற்ற முதல்வரின் தலைமையில் ஆட்சி நடக்கவில்லை இங்கே சர்க்கஸ் தான் நடக்கிறது" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

## வெம்பக்கோட்டை அகழாய்வில் சங்கு வளையல்கள் கண்டெடுப்பு

சாத்தூர், மே. 17-

வெம்பக்கோட்டையில் நடந்து வரும் அகழாய்வில் நேற்று பண்டைகால சங்கு வளையல்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. மேலும், அங்கு நடைபெற்றுவரும் தொல்பொருள் கண்காட்சியை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.





விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே உள்ள வெம்பக்கோட்டை விஜயகரிசல்குளம் மேட்டுக்காட்டில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் அகழாய்வு பணிகள் தொடங்கப்பட்டன. அதைத்தொடர்ந்து கடந்த மாதம் 2-ம் கட்ட அகழாய்வு பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. இதுவரை இந்த அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட நுண் கற்காலம் முதல் வரலாற்று தொடக்க காலம் வரை இப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட பானை ஓடுகள், நுண்கற்கால கருவிகள், பல வகையான பாசிமணிகள், சுடுமண்ணாலான காதணிகள், பொம்மைகள், தக்களி, சங்ககால வளையல்கள், மோதிரங்கள், சில்லு வட்டுகள், இரும்பு உருக்கு கழிவுகள், சங்கு வளையல்கள் என 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருள்கள் கிடைத்துள்ளன.

அகழாய்வில் கிடைத்த இப்பொருள்களை பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், பொதுமக்கள் பார்த்து அறிந்துகொள்ளும் வகையில் வெம்பக்கோட்டையில் அகழாய்வு நடைபெறும் பகுதியில் தொல்பொருள் கண்காட்சி தொடங்கப்பட்டுள்ளது. கடந்த 13ம் தேதி இக்கண்காட்சியை வருவாய்த்துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன், நிதி அமைச்சர் தங்கம்தென்னரசு ஆகியோர் திறந்துவைத்தனர். இக்கண்காட்சியை பார்வையிட வரும் மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்களுக்காக வெம்பக் கோட்டையிலிருந்து இலவச பேருந்து வசதியும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. தினந்தோறும் ஏராளமானோர் இக்கண்காட்சியை பார்வையிட்டுச் செல்கின்றனர்.

வெம்பக்கோட்டை விஜயகரிசல்குளம் மேட்டுக்காட்டில் நடைபெற்று வரும் 2ம் கட்ட அகழாய்வில் தொடர்ந்து ஏராளமான பழங்கல பொருள்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், பழமையான நாகரீகத்தையும், கலை நுணுக்கத்தையும் விளக்கும் வகையில் முன்னோர்கள் பயன்படுத்திய சங்கு வளையல்கள் நேற்று கண்டெடுக்கப் பட்டுள்ளன.

தொடர்ந்து இப்பகுதியில் இதுபோன்ற அரிய பல பொருள்கள் கண்டெடுக்கப்பட்டு வருவதாக தொல்லியல்துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

# இன்று

17-5-2023




காய்ச்சிய கேட்ப எண்ணெய் தட விளால் சேற்றுப்புண் குணமாகும்
சக வருடம் 1945 வைசாகம் 27

| | | | |
|---|---|---|---|
| சோபகிருது வைகாசி 3 | MAY - WED புதன் | ஷவ்வால் 26 தேய்பிறை 137 / 228 | இராசிபலன் |

தேய். திரயோதசி 42.45 (மா. 10.59) ரேவதி 05.53 (கா. 08.14) தியாஜ் 55.08 அகஸ் 31.12 மரண. பிரதோஷம். மாத சிவராத்திரி. சென்னை கேசவ பெருமாள் விடையாற்று உற்சவம். காரைக்குடி கொப்புடையநாயகி அம்மன் யானை வாகன உலா. சிவாலயங்களில் நந்தீஸ்வர வழிபாடு நன்று. நகக.

| | நல்லநேரம் | கௌரி நல்ல நேரம் | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.30-10.30 | 10.30-11.30 | 12.00 | 10.30 | 07.30 |
| மாலை | 4.30-5.30 | 6.30-7.30 | 01.30 | 12.00 | 09.00 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்; ரிஷப லக்கனம் இருப்பு நா. 4 வி. 27; சந்திராஷ்டமம் பூரம்; கரணம் : 6-7.30; சூரிய உதயம் : 5.53

எண்ணாமல் செய்தேவர் மட்டி

இராசிபலன்: மேஷம் - சிந்தனை; ரிஷபம் - புகழ்; மிதுனம் - பொறாமை; கடகம் - முயற்சி; சிம்மம் - விருத்தி; கன்னி - நிறைவு; துலாம் - வெற்றி; விருச்சி - பெருமை; தனுசு - பாராட்டு; மகரம் - உயர்வு; கும்பம் - நலம்; மீனம் - நட்பு

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# முதல்வர் மு.க.ஸ்டாலின் உடன் சிபிஎம் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி சந்திப்பு



சென்னை , மே.17–

முதல்வர் மு.க.ஸ்டாலினை சிபிஎம் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி சந்தித்து பேசினார். முதல்வர் மு.க.ஸ்டாலினை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தேசிய பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி சென்னை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து பேசினார்.

விழுப்புரத்தில் நடைபெறும் பட்டியலின பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்கதமிழகம்வந்துள்ள நிலையில் இந்த சந்திப்பு நடைபெற்றது. முதவரை சந்தித்த பின் சிதாராம் யெச்சூரிசெய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- "மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினேன்.

கர்நாடக சட்டசபை தேர்தல் முடிவுகள், தேர்தலுக்கு பிந்தைய நிலவரம், மதசார்பற்ற கட்சிகளின்ஒருங்கிணைப்பு குறித்து முதல்வரிடம் கலந்துரையாடினேன். பாஜகவை வீழ்த்த விருப்பமுள்ளவர்கள் ஒன்றினைய வேண்டும். எதிர்க்கட்சிகளின் ஆலோசனை கூட்டம் விரைவில் நடைபெறும். இந்திய அரசமைப்பையும், ஜனநாயகத்தையும் பாதுகாக்க, மாநிலகள் அளவில் பாஜகவை ஆட்சியில் அமரவிடாமல் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்று கூறினார்.

# திருவரங்குளம் ஸ்ரீபிடாரி அம்மன் கோவிலில் சித்திரைத் திருவிழா



திருவரங்குளம், மே.17–

புதுக்கோட்டை திருக்கோவிலைச் சார்ந்த திருவரங்குளம் ஸ்ரீபிடாரி அம்மன் கோவிலில் சித்திரைத் பெருவிழா கடந்த 9-ஆம்தேதி காப்பு கட்டுதலுடன் தொடங்கியது. அன்று முதல் ஒவ்வொரு மண்டகப்படிதாரர்கள் சார்பில் சாமி வீதிவுலா, சந்தனகாப்பு அலங்காரம் போன்றவைகள் நடைபெற்று வந்தன. விழாவின் முக்கியமான நிகழ்வான 8-ஆம்நாள் திருவிழா நேற்று நடைபெற்றது. இதில் பக்தர்கள் பால்குடம், காவடி, அலகு குத்துதல், குழந்தைதொட்டிகட்டுதல் போன்றவைகளை எடுத்து தங்களுடைய நேர்த்திக்கடனை செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து பூசாரி கிடாவெட்டுதல் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். நள்ளிரவு முளைப்பாரியும், இன்று அதிகாலை பூமித்தலும், மாலையில் எல்லைச் சட்டி உடைத்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இத்திருவிழாவில் கோவில்பட்டி, இடையன் வயல், வேப்பங்குடி, பாரதியார் நகர், நிம்பனேஸ்வரம், பெரியநாயகிபுரம், தோப்புக்கொல்லை, மாஞ்சான்விடுதி, கிட்டக்காடு, தெற்குத் தெரு, இம்னாம்பட்டி, தேத்தாம்பட்டி போன்ற பல்வேறு பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்கின்றார்கள்.






தென்காசி மாவட்டம்- கடையநல்லூரில் முன்னாள் திமுக செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினருமான மா. செல்லத்துரை பிறந்தநாளில் 500 ஏழை பெண்களுக்கு இலவச அரிசி பைகளும், கடையநல்லூர் யூனியனுக்கு உட்பட்ட நெடுவயலில் 8.25 லட்சத்தில் ஊனமுற்றோருக்கான கழிப்பிடம், மாவட்ட பஞ்சாயத்து தலைவி தமிழ்ச்செல்வி போஸ் திறந்து வைக்கப்பட்டது. சிவராம பேட்டையில் 5.25 லட்ச ரூபாயில் வாறு கால் யூனியன் சேர்மன் சுப்பம்மாள் பால்ராஜ் தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டது, மேலும் ஆய்க்குடி அமர்சேவா சங்க ஊனமுற்றோர் குழந்தைகளுக்கு மதிய உணவும், சாம்பவர் வடகரை அன்பு இல்லம் ஊனமுற்றோர் குழந்தைகளுக்கு மதிய உணவும் செல்லத்துரையால் வழங்கப்பட்டது. மேலும் திமுக தொண்டர்கள் பட்டாசு வெடித்தும் லட்டு வழங்கியும் மாலை அணிவித்தும் கொண்டாடி மகிழ்ந்தனர். நிகழ்ச்சியில் திமுக நகர செயலாளர் எஸ். அப்பாஸ், யூனியன் சேர்மன் சுப்பம்மாள், துணை சேர்மன் ஐவேந்திரன் தினேஷ், ஒன்றிய செயலாளர் சுரேஷ், கடையநல்லூர் அவைத்தலைவர் பெட்டி முருகன், நகர்மன்றஉறுப்பினர்கள்முருகன், திவான் மைதீன், அருணாசல பாண்டியன், பொன்னுதுரைச்சி, பூங்கொடி, மதி மாரிமுத்து, சாம்பவர் வடகரை ராமச்சந்திரன், காசி, முருகையா, நல்லையா, செய்யது மீரான், செய்யது மசூது, யாசின், காளிமுத்து, திரிகூடபுரம், சுப்பிரமணியம், தங்கப்பாண்டி, ராஜ், முத்துக்குமார், வெற்றிவேல், பெருமாள் மாரிச்செல்வம், முதலியான்கான், மற்றும் ஏராளமான திமுக தொண்டர்கள் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

# அரியலூர் அரசு போக்குவரத்து கழக பணிமனையில் குளிரூட்டப்பட்ட ஓய்வறை அமைச்சர் எஸ்.எஸ் சிவசங்கர் திறந்து வைத்தார்



அரியலூர் , மே.17–

அரியலூர் அரசு போக்குவரத்து கழக பணிமனையில், டிரைவர் மற்றும் கண்டக்டர்களுக்கு குளிரூட்டப்பட்ட ஓய்வறையை, போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ் சிவசங்கர் திறந்துவைத்தார்.

அரியலூர் அரசு போக்குவரத்து கழக பணிமனையில்நடைபெற்ற அரசுவிழாவுக்கு, அரியலூர் கலெக்டர் பெ.ரமண சரஸ்வதி, தலைமை வகித்தார். தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம், அரியலூர் கிளையில், ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கான குளிரூட்டப்பட்ட ஓய்வறையினை போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ் சிவசங்கர்துவங்கிவைத்தார்.

பின்னர், போக்குவரத்துத் தொழிலாளர்களிடம் குறைகளை கேட்டறிந்ததுடன், தொழிலாளர்களின் குறைகளை நிறைவேற்றிட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், போக்குவரத்து அலுவலர்களுடன் பணி மேம்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

# அரியலூரில் ஒன்றிய குழு கூட்டம்



அரியலூர் மே 17

அரியலூரில் ஊராட்சி ஒன்றிய குழு கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் ஊராட்சி ஒன்றிய குழு கூட்ட மன்றத்தில் நடைபெற்ற, ஒன்றிய குழு கூட்டத்திற்கு, சேர்மன் செந்தமிழ் செல்வி தலைமை வகித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அருளப்பன், செந்தில்குமார், உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். துணை சேர்மன் சரஸ்வதி ஜெயவேல் வரவேற்று பேசினார்.

12 லட்சத்து 79 ஆயிரத்து 121 ரூபாய் மதிப்பில், ஒன்றிய குழு தலைவருக்கு, மகேந்திரா அண்ட் மகேந்திரா நிறுவனத்தில் புதிதாக ஜீப் வாங்க, ஒன்றிய பொது நிதியிலிருந்து காசோலையாக வழங்குவது மற்றும் பல்வேறு நிர்வாக செலவினங்கள் உட்பட 28 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட இக்கூட்டத்தில், அலுவலக மேலாளர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆனந்தன், இளநிலை உதவியாளர் சுப்பிரமணியன், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் வெள்ளைச்சாமி, முத்துசாமி, பாப்பாள், சரவணன், முருகேசன், ராணி, செந்தமிழ்ச்செல்வி, கண்ணகி, சுந்தர வடிவேல், ரேவதி, மாலா, வைப்பம் சிவபெருமாள், ராதாகிருஷ்ண வேணி, விஜயகுமார், சுரேஷ்குமார், மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றார்கள்.

# புதுக்கோட்டை நகராட்சி தூய்மை ஒப்பந்த தொழிலாளர்கள் திடீர் போராட்டம்



புதுக்கோட்டை, மே.17–

ஊதியம் வழங்காததைக்கண்டித்து புதுக்கோட்டை நகராட்சி தூய்மை ஒப்பந்த தொழிலாளர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புதுக்கோட்டை நகராட்சியில் தூய்மை பணிகளை மேற்கொள்வதற்காக தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த தொழிலாளர்களால மொத்தம் 223 பேர் பணியாற்றி வருகின்றனர். அதில், புதுக்கோட்டை பேருந்து நிலையப் பகுதியில் துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கென 47 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.


இத்தொழிலாளர்களுக்கு மாதம் தோறும் 5,6 தேதிகளில் ஊதியம் வழங்கப்படும் நிலையில், இந்த மாத ஊதியம் இது நாள் வரை ஊதியம் வழங்கவில்லை என கூறப்படுகிறது.

இந்நிலையில், நகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்து துப்புரவு பணியாளர்கள் புதுக்கோட்டை பேருந்து நிலையத்தின் மையப்பகுதியில் நேற்று காலை திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிஐடியு உள்ளாட்சி சங்க மாவட்டத்தலைவர் கே. முகமதலி ஜின்னா, மாவட்டச்செயலர் ஸ்ரீதர், துணைத்தலைவர் அன்பு மணவாளன், துணைச்செயலர்கள் ரத்தினம், சரவணன், யாசின், சிஐடியு நகர ஒருங்கிணைப்பாளர் முத்தையா உள்ளிட்டோர் அங்கு சென்று போராட்டம் நடத்திய தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

தகவலறிந்து அங்கு வந்த நகராட்சி பொறியாளர் ஓரிரு நாள்கள் பொறுத்திருக்க வேண்டும் என கூறினார். ஆனால் இதை ஏற்க மறுத்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை தொடர்கின்றார்கள்.

# பள்ளி கல்வி ஆணையர் பதவியை நீக்கிவிட்டு மீண்டும் இயக்குநர் பதவியை ஏற்படுத்த ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை, மே.17–

பள்ளிக் கல்வித் துறையில் ஆணையர் பதவியை நீக்கிவிட்டு, மீண்டும் இயக்குநர் பதவியை ஏற்படுத்த வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள தனது ட்விட்டர் பதிவில், ''தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் பொறுப்பிலிருந்து நந்தகுமார் இ.ஆ.ப மாற்றப்பட்டதாலும், அந்தப் பொறுப்புக்கு இதுவரை வேறு எவரும் அமர்த்தப்படாததாலும் பள்ளிக் கல்வித் துறையில் ஆணையர் பதவி நீக்கப்பட்டு, மீண்டும் இயக்குநர் பதவி ஏற்படுத்தப்படஇருப்பதாக கல்வியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே எதிர்பார்ப்புஎழுந்துள்ளது. அவர்களின் எதிர்பார்ப்பு நியாயமானது. அது நிறைவேற்றப்பட வேண்டும்.

பள்ளிக் கல்வி இயக்குநர் பதவி கடந்த 2021-ஆம் ஆண்டு மே மாதம் நீக்கப்பட்டு, அதன் பொறுப்புகள் அனைத்தும் பள்ளிக் கல்வி ஆணையரிடம் ஒப்படைக்கப் பட்டபோதே அதை பாட்டாளி மக்கள் கட்சி கடுமையாக எதிர்த்தது. பள்ளிக்கல்வி இயக்குநர் என்பது அதிகாரம் சார்ந்த பணியல்ல. மாறாக அனுபவம் சார்ந்த பணியாகும். சாதாரண ஆசிரியராக பணியைத் தொடங்கும் ஒருவர், மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர், மாவட்ட கல்வி அலுவலர், முதன்மைமாவட்டக்கல்வி அலுவலர், பள்ளிக்கல்வி இணை இயக்குநர், பள்ளிக் கல்வி கூடுதல் இயக்குநர் என, பல்வேறு பொறுப்புகளை சுமந்து, அவற்றில் கிடைக்கும் அனுபவத்தைக்கொண்டு தான் பள்ளிக் கல்வி இயக்குநர் பொறுப்பை நிர்வகிக்க முடியும். இ.ஆ.ப.அதிகாரிகளால் நிர்வகிக்கமுடியாது என்று கூறியிருந்தேன்.

பள்ளிக் கல்வித் துறையில் கடந்த இரு ஆண்டுகளில் நடைபெற்ற பல குழப்பங்களுக்கு, ஆணையரிடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டதும் ஒருகாரணமாகும்.இனியும் அத்தகைய குழப்பங்கள் நடக்கக் கூடாது. அதை உறுதி செய்வதற்காக பள்ளிக்கல்வி ஆணையர் பதவியை நீக்கிவிட்டு, பள்ளிக் கல்வி இயக்குநர் பதவியை மீண்டும் கொண்டு வர வேண்டும். பள்ளிக் கல்வி இயக்குநரகத்தை நிர்வகிக்கும் பொறுப்பு இயக்குநருக்குவழங்கப்பட வேண்டும். அந்தஇடத்தில் அனுபவம் உள்ள நேர்மையான அதிகாரி அமர்த்தப்பட வேண்டும்.

பள்ளிக் கல்வி ஆணையர் நந்தகுமார் பணியிட மாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவர் கூடுதல் பொறுப்பாக கவனித்து வந்த ஆசிரியர் தேர்வு வாரியத்தலைவர் பதவியும் காலியாகியுள்ளது. கடந்த 8 மாதங்களாக ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு முழுநேரத் தலைவர் இல்லாததால் வாரியம் முடங்கிக் கிடக்கிறது. எனவே, ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு உடனடியாக முழுநேரத் தலைவர் ஒருவரை நியமிக்க வேண்டும்" என்று ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

### முடிச்சு போடுவது பற்றி ஆன்லைனில் தேடல்...

# மனைவி, மகள் கொலை; கணவர் தற்கொலை

புதுடெல்லி , மே.17–

டெல்லியில், முடிச்சு போடுவது எப்படி? என ஆன்லைனில் தேடி, தெரிந்து மனைவி, மகளை கொலை செய்த கணவர் தற்கொலை செய்த சோக சம்பவம் நடந்து உள்ளது.

டெல்லியின் ஷாதரா மாவட்டத்தில் ஜோதி நகர் பகுதியில் மனைவி, 13 வயது மகன் மற்றும் 6 வயது மகளுடன் வசித்து வந்தவர் சுஷில் (வயது 43). இவர் கிழக்கு வினோத் நகர் பகுதியில் உள்ள டி.எம்.ஆர்.சி.யில் பராமரிப்பு மேற்பார்வையாளர் பணியில் இருந்து வந்து உள்ளார். இந்த நிலையில், சுஷிலின் சக பணியாளரிடம் இருந்து போலீசாருக்கு தொலைபேசி அழைப்பு வந்து உள்ளது.

அதில் பேசிய அந்த நபர், சுஷில் என்னை தொலைபேசி வழியே தொடர்பு கொண்டு குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரையும் கொன்று விட்டேன் என கூறினார். அவரிடம் மீண்டும் பேச முற்பட்டபோது அவர், அழைப்பை எடுக்கவில்லை என கூறியுள்ளார். இதனால் உஷாரான போலீசார் உடனடியாக அழைப்பு வந்த பகுதியை ஆய்வு செய்து, சம்பவ பகுதிக்கு விரைந்து சென்றனர். எனினும், அந்த பகுதியில் 3 உடல்கள் கிடந்துள்ளன. சுஷில் தூக்கு போட்டு தற்கொலை செய்துள்ளார். அவரது மனைவி, மகள் கத்தியால் குத்தப்பட்டு, காயங்களுடன் உயிரிழந்து கிடந்தனர்.

இந்த சம்பவத்தில் மகனையும் சுஷில் கொலை செய்ய முயன்றுள்ளார். எனினும், போலீசார் வந்தபோது உயிருடன் இருந்த சுஷிலின் மகனை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். முதல்கட்ட விசாரணையில் குடும்பத்தினரை கொலை செய்து விட்டு, சுஷில் தூக்கு போட்டு தற்கொலை செய்துள்ளார் என போலீசார் தெரிவித்தனர். தடய அறிவியல் ஆய்வக குழுவினரும் சம்பவ பகுதிக்கு சென்றுள்ளனர். இந்த சம்பவத்தில், தூக்கு போடுவதற்கு முன்பு முடிச்சு போடுவது எப்படி? என்று ஆன்லைனில் தேடி, அதன் விவரங்களை சுஷில் தெரிந்து கொண்டுள்ளார் என போலீசார் தெரிவித்தனர். இதுபற்றி தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

### தமிழ்நாடு அரசுத்துறை ஊர்தி ஓட்டுநர்கள் சங்கத்தின் சார்பில்

# 5 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி கவன ஈர்ப்பு போராட்டம்




ஊத்துக்கோட்டை, மே, 17 –

தமிழ்நாடு அரசு துறை ஊர்தி ஓட்டுநர்கள் சங்கத்தின் திருவள்ளூர் மாவட்ட கிளையின் சார்பில் 5 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி மூன்று கட்ட போராட்டங்களை அறிவித்தனர்.

முதல் கட்டப் போராட்டமாக கடந்த 8 ஆம் தேதி கோரிக்கை அட்டையை அணிந்து கொண்டுபணியாற்றினர். இருப்பினும் தங்களது கோரிக்கையை தமிழக அரசு செவி கொடுத்து கேட்கவில்லை என்று சங்கத்தின் சார்பில் கூறினர். இதனால் 2 ஆம் கட்டமாக நேற்று முன்தினம் மாலை கலெக்டர் அலுவலகம் முன்பு கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்திற்கு மாவட்ட தலைவர் மனோகரன் தலைமை தாங்கினார். மாநிலத் தலைவர் சுப்பிரமணி, மாநில பொதுச் செயலாளர் வெங்கடாஜலபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் ஸ்டான்லி போராட்டத்தைதுவக்கி வைத்து பேசினார். தங்களது கோரிக்கை நிறைவேறாத பட்சத்தில் மூன்றாம் கட்டமாக வரும் 22 ஆம் தேதி திங்கட்கிழமை அன்று சென்னையில் மாநில அளவில் கோட்டையை நோக்கி பேரணி செல்வது என்று தீர்மானித்துள்ளனர். போராட்டத்தின் முடிவில் மாவட்ட பொருளாளர் முருகேசன் நன்றி கூறினார்.

# இடி, மின்னலுடன் பலத்த காற்றால் மின் ஒயர் அறுந்து விழுந்து மூன்று ஆடுகள் பலி பழமை வாய்ந்த வேப்பமரம் வேரோடு சாய்ந்தது



ஊத்துக்கோட்டை, மே, 17 –

தமிழகத்தில் கடந்த இரண்டு நாட்களாக கடும் வெயிலால் பொதுமக்கள் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர். பல்வேறு மாவட்டங்களில் வெப்பநிலை சதம் அடித்தது.

நேற்று திருவள்ளூர் மாவட்டத்தில் பல இடங்களில் சுமார் ஒரு மணி நேரம் இடி-மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதனால் சிறிது வெப்பம் தணிந்து பொதுமக்கள் பெருமூச்சு விட்டனர். இந்நிலையில், திருவள்ளூரில் முகமது தெருவில் பிரசித்தி பெற்ற கோலம்கொண்ட அம்மன் திருக்கோவில் உள்ளது. இக்கோவில் வளாகத்தில் சுமார் 50 ஆண்டுகள் பழமை வாய்ந்த வேப்பமரம் ஒன்று உள்ளது. இதனை பக்தர்கள் மஞ்சள் குங்குமம் இட்டு வழிபட்டு வந்தனர்.

இந்நிலையில் இடி-மின்னலுடன் பலத்த காற்றும் வீசியதால் இந்த வேப்பமரம் வேரோடு சாய்ந்தது. மேலும், பெரியபாளையம் அருகே தண்டலம் கிராமத்தில் இடி-மின்னல் பலத்த காற்றுக்கு மின் கம்பம் ஒன்று உடைந்து விழுந்தது. இதனால் அந்தக் கம்பத்தில் இருந்த மின் வயர்கள் அறுந்து விழுந்தது. இதில் சிக்கி தண்டலம் பகுதியை சேர்ந்த முருகன் (50) என்பவரது மூன்று ஆடுகள் துடிதுடித்து பலியானது.

3 ஆடுகள் இறந்த சம்பவம் குறித்து பெரியபாளையம் காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர். பலத்த காற்று வீசுவதால் மேற்கண்ட பகுதிகளில் மின் தடை ஏற்பட்டுள்ளது.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ஹெச். கிருஷ்ணனுண்ணியை, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள ஆர்.பி.மோகன் நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார்.

# சீர்காழி சட்டநாதர் சுவாமி கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கலசம் வைக்கும் பணி தீவிரம்



சீர்காழி, மே, 17 –

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான சட்டநாதர் சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது. திருஞான சம்பந்தர்க்கு உமையம்மை ஞானப்பால் வழங்கிய இத்தலத்தில் திருநிலைநாயகி அம்மன் உடனுறையாக பிரம்மபுரீஸ்வரர் சுவாமி அருள் பாலித்து வருகிறார்.

பிரசித்தி பெற்ற இக்கோயிலில் 32 ஆண்டுகளுக்குப் பிறகு வரும் மே 24 ஆம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. இதனை ஒட்டி கோயிலில் உள்ள நான்கு கோபுரங்கள், பிரகாரங்கள், அனைத்து சுவாமி சன்னதிகள், விமானங்கள் புதுப்பிக்கப்பட்டும், கருங்கல் சன்னதி மற்றும் கருங்கல் பிரகாரம் அமைக்கப்பட்டு திருப்பணிகள் நிறைவு பெற்று வருகிறது.

இக்கோயிலில் உள்ள ருணம் தீர்த்த விநாயகர் விமானத்தில் தருமபுரம் ஆதீனம் 27 ஆவது குருமஹா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் திருகரத்தால் கோபுர கலசம் வைக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டது.

நேற்று காலை கிழக்கு ராஜகோபுரத்தில் கோபுர கலசம் வைக்கும் பணி தொடங்கியது. முன்னதாக கோபுர கலசங்களுக்கு சிறப்பு அபிஷேகம் வழிபாடு செய்யப்பட்டு கிழக்கு ராஜகோபுர திருப்பணி உபயதாரர் மார்கோனி, அவரது குடும்பத்தினர்கள் மற்றும் பக்தர்கள் நவ தானியங்களை கோபுர கலசத்தில் இட்டு கலசத்திற்கு சிறப்பு வழிபாடு செய்தனர். அதன் பின்னர் கோபுர கலசங்கள் கிழக்கு ராஜகோபுரத்தில் அமைக்கும் பணி தொடங்கி நடைபெற்றது.

முன்னதாக சீர்காழி தொழிலதிபர் மார்கோனி குடும்பத்தினர் கோயிலுக்கு கோ தானம் வழங்கி, கோ பூஜை செய்தனர். இதில் திரளான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் மேற்கொண்டனர்.

# திமுக இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ பங்கேற்பு



திருவள்ளூர், மே, 17 –

திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக இளைஞரணி, ஒன்றிய, நகர, பேரூர், கிளை அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் பெருவாயலில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு மாவட்ட அவைத்தலைவர் மு.பகலவன் தலைமை தாங்கினார். மாவட்ட துணை அமைப்பாளர்கள் கே.வி.லோகேஷ், ஜெ.மோகன்பாபு, ஆர்.தில்லைகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் தமிழக முதல்வரின் 2 ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியின் சாதனை விளக்கி தெருமுனை கூட்டங்களை மாவட்டம் முழுவதும் நடத்துவது, மாவட்டம் முழுவதும் உறுப்பினர்களை சேர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுவது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில், திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

30 ஆண்டுகளாக ஓஎன்ஜிசி நிறுவனத்தில் பணியாற்றி வரும்

# ஒப்பந்த டிரைவர்கள் தொடர்ந்து பணி வழங்க கோரி குடும்பத்தினருடன் உண்ணாவிரதம்



காரைக்கால், மே, 17 –

ஓஎன்ஜிசி நிறுவனத்தில் காரைக்கால், நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 100 க்கும் மேற்பட்ட ஒப்பந்த ஓட்டுனர்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் காரைக்கால் ஓஎன்ஜிசி நிறுவனத்திற்கு புதிதாக வந்த டிஜிஎம் வேறொரு தனியார் நிறுவனத்தின் மூலம் ஓட்டுனர்களுக்கு பணி வழங்குவதாகவும், 30 ஆண்டுகளாக பணியாற்றி வரும் ஒப்பந்த ஓட்டுனர்களை புறக்கணிப்பதாகவும் குற்றம் சாட்டி 100 க்கும் மேற்பட்ட ஓட்டுனர்கள் குடும்பத்தினருடன் காரைக்காலில் உள்ள ஓஎன்ஜிசி அலுவலகத்தின் எதிரே உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் போது ஓஎன்ஜிசி நிர்வாகத்தையும், புதிதாக பதிவேற்றுள்ள டிஜிஎம் ஐ கண்டித்தும், டிஜிஎம் செபஸ்டினை வெளியேற்ற வலியுறுத்தியும் கண்டன முழக்கங்களை எழுப்பினர். போராட்டத்தின் போது செய்தியாளிடம் பேசிய தொழிலாளர் விடுதலை முன்னணி தலைவர் நகு.செல்வ சுந்தரம், "ஓஎன்ஜிசி நிர்வாகத்தில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்த ஓட்டுநர்களாக பணியாற்றி வரும் தொழிற்சங்க நிர்வாகிகளை புறக்கணிக்கும் நோக்குடன் ஓஎன்ஜிசி நிர்வாகம் செயல்படுவதாகவும், இதனை வன்மையாக கண்டிப்பதாகவும் இரண்டு மூன்று தினங்களுக்குள் தொழிற்சங்க நிர்வாகிகளை அழைத்து பேசி சுமுக முடிவு ஏற்படாவிட்டால் ஓஎன்ஜிசி நிறுவனத்தின் எண்ணெய் நிறுவனங்களில் தொடர் போராட்டம் நடத்த உள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

இப்போராட்டத்தில் க.பார்வேந்தன், சே.அந்தோணி ராஜ், எம்.கலியபெருமாள், வி.பிரகலாதன், விஜயபாலன் உள்ளிட்ட 100 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கலெக்டர் அலுவலக வளாகத்தில்

# குடும்பத்துடன் தற்கொலை முயற்சி: மகன் மீது தவறாக வழக்கு பதிவு செய்ததாக குற்றச்சாட்டு



திருவள்ளூர், மே, 17 –

திருவள்ளூர் அடுத்த வெங்கத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர் சுடர்மணி (வயது 40). இவரது மனைவி செல்வி (வயது 38). இந்த தம்பதியினருக்கு இரண்டு மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். இதில் மகன் நவீன் குமார் (வயது 19) அம்பத்தூர் ஐடிஐ யில் படித்துவிட்டு 2 வருடங்களாக தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார்.

கடந்த ஆண்டு பக்கத்து ஊரான வலசை வெட்டி காடு கிராமத்தில் அடிதடி பிரச்சினை ஏற்பட்டது. அப்போது வெங்கத்தூரைச் சேர்ந்த வேண்டாத ஒரு சிலர் நவீன்குமாரின் பெயரையும் சேர்த்து மணவாள நகர் காவல் நிலைய போலீசாருக்கு தகவல் கொடுத்துள்ளனர். அது தவறான தகவல் எனச் சொல்லி அந்த வழக்கு சம்மந்தமாக சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகி முன் ஜாமீன் பெற்றுள்ளனர். இதனிடையே நவீன்குமார் எந்தவிதமான தவறான செயல்களிலோ, சட்டத்திற்கு புறம்பான செயல்களிலோ ஈடுபடவில்லை என கூறப்படுகிறது.

இந்த நிலையில் விசாரணைக்காக அழைத்து செல்கிறோம் என்று நவீன் குமாரை அடிக்கடி காவல் நிலையத்துக்கு அழைத்து செல்வது வாடிக்கையாக இருக்கின்றது. மேலும் விசாரணை என்ற பெயரில் நவீன் குமாரின் இரண்டு வாகனங்களையும் போலீசார் பறிமுதல் செய்து காவல் நிலையத்தில் வைத்துள்ளனர். இதனால் நவீன் குமாரின் குடும்பத்தினர் காவல் நிலையத்திற்குச் சென்று வாகனத்தை கேட்டபொழுது நவீன் குமார் மீது 110 வழக்கு போட்ட பிறகுதான் வாகனங்களை திருப்பி தருவோம் என கூறயுள்ளனர்.

இதனால் நேற்று முன் தினம் திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்திற்கு வந்த சுடர்மணி, செல்வி குடும்பத்தினர் திடீரென உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தனர். இதனால் அங்கு பணியில் இருந்த போலீசார் அதிர்ச்சி அடைந்தனர். மின்னல் வேகத்தில் செயல்பட்டு சுடர்மணி-செல்வி தம்பதியின் குடும்பத்தினரை காப்பாற்றினர்.

விசாரணையில் தனது மகன் மீது பொய்யான வழக்குகளை போலீசார் போடுகின்றனர். அவனுடைய வாழ்க்கை கேள்விக்குறியாக உள்ளது. இதனால் தான் குடும்பத்துடன் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டோம் என்று கூறினர். பின்னர் மாவட்ட கலெக்டரிடம் மனு அளித்து விட்டு மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டவர்களை அரசு ஆஸ்பத்திரிக்கு போலீசார் அனுப்பி வைத்தனர். இச்சம்பவத்தால் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

# உலக பிரசித்தி பெற்ற ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம் ஸ்ரீ சனீஸ்வர பகவான் ஆலய பிரம்மோற்சவ விழா

## ஜூன் 30 இல் திருத்தேரோட்டம்



திருநள்ளாறு, மே, 17 –

புதுச்சேரி மாநிலம், காரைக்கால் அடுத்த திருநள்ளாறில் அமைந்துள்ளது உலக பிரசித்தி பெற்ற ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம் ஸ்ரீ சனிஸ்வர பகவான் ஆலயம். இங்கு வைகாசி பிரம்மோற்சவ விழா நேற்று கொடியேற்றத்துடன் விமரிசையாக துவங்கியது.

கொடியேற்றத்தை முன்னிட்டு ரிஷப கொடியை வீதியுலாவாக எடுத்து சென்று மீண்டும் ஆலயத்திற்கு வந்தடைந்த பின்னர் கொடி மரத்து கணபதிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. அதனை தொடர்ந்து வேத மந்திரங்கள், மங்கள வாத்தியங்கள் முழங்க கொடியேற்றப்பட்டது. கொடியேற்றத்தை தொடர்ந்து பஞ்ச மூர்த்திகள் வீதியுலா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# பாலினம் பிரிக்கப்பட்ட செயற்கை முறை கருவூட்டல் குறித்து கருத்தரங்கம்

## மாவட்ட ஆட்சியர், அமைச்சர் குத்து விளக்கேற்றி துவக்கினர்



காரைக்கால், மே, 17 –

புதுவை அரசு கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடைத்துறை மூலமாக பாலினம் பிரிக்கப்பட்ட செயற்கை முறை கருவூட்டல் குறித்த ஒரு நாள் கருத்தரங்கை போர்க்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையில், காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் முன்னிலையிலும் குத்துவிளக்கேற்றி விழாவை துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வில் கால்நடை பராமரிப்பு துறை இயக்குனர் லதா மங்கேஷ்கர் துணை இயக்குனர் டாக்டர் கோபிநாத் மற்றும் பஜன்கோவா, கேவிகே பேராசிரியர்கள், கால்நடை வளர்ப்பவர்கள், பால் உற்பத்தியாளர்கள், விவசாயிகள் என சுமார் 300-க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் பேசிய காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் மத்திய அரசின் ராஷ்ட்ரிய கோகுல் திட்டம் என்ற இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் பால் உற்பத்தியை பெருக்குவது தான் என்றும், நிறைய பசுக்கள் கிடாரி கன்றுகள் பிறப்பதற்கு பதிலாக காலை கன்றுகளை ஈன்றெடுப்பதால் பால் உற்பத்தி விவசாயிகளுக்கு தடையாக உள்ளது. இதன் காரணமாக மத்திய அரசு கொண்டு வந்த பாலினம் பிரிக்கப்பட்ட உரை விந்து என்ற இத்திட்டத்தின் மூலம் பாலினம் பிரிக்கப்பட்ட ஒரு ஊசி மானிய விலையில் மாடுகளுக்கு போடப்படும் என்றும், இதன் மொத்த ரூபாய் 675. இதில் மத்திய, மாநில அரசுகளின் சலுகைகள் போக ரூபாய் 275 -க்கு ஒரு ஊசி போடப்படும். இதன் மூலம் 90% கிடாரி கன்றுகள் பிறப்பது உறுதி செய்யப்படும் என்றும் கூறிய ஆட்சியர் காரைக்காலில் 18,000 மாடுகள் உள்ளன என்றும், அடுத்த மூன்று ஆண்டுகளில் 50,000 மாடுகளை பெருக்க முடியும் என்றும், இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் 50 ஆயிரம் லிட்டராக பால் உற்பத்தியை பெருக்க ஏதுவாக இருக்கும் என்றும் ஆட்சியர் கூறினார்.

மேலும் இந்நிகழ்வில் பேசிய போக்குவரத்து துறை அமைச்சர் கூறுகையில், முதலில் விவசாயிகளுக்கும், பால் உற்பத்தியாளர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பால் உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகள் இத்திட்டத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கூறிய அமைச்சர் சந்திர பிரியங்கா, பால் உற்பத்தியாளர்கள் இத்திட்டத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# கஞ்சா, போதை மருந்துகள் வைத்திருந்தவர்களை மதுவிலக்கு போலீசார் கைது செய்து அதிரடி நடவடிக்கை



ஈரோடு, மே, 17 –

ஈரோடு மாவட்டத்தில் காவல்துறை கண்காணிப்பாளர் சசிமோகன் ஆணைப்படி கஞ்சா மற்றும் போதைப் பொருட்கள் விற்பதை தடுக்க காவல்துறையினர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

அதன் அடிப்படையில் மதுவிலக்கு டிஎஸ்பி பவித்ராவிற்கு ஈரோடு கைகாட்டி வலசு பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் போதை மாத்திரை, கஞ்சா விற்பதாக ரகசிய தகவல் கிடைத்தது. ரகசிய தகவலின்படி, மதுவிலக்கு சிறப்பு உதவி காவல் ஆய்வாளர் செந்தில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சட்டவிரோதமாக கஞ்சா என்னும் போதை பொருள் மற்றும் மருத்துவர் ஆலோசனை இன்றி உட்கொண்டால் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய மாத்திரைகள் ஆகியவற்றை விற்பனை செய்ய வைத்திருந்த நபர்களை சுற்றி வளைத்து பிடித்தனர்.

மேலும் இவர்களிடமிருந்த மாத்திரை அட்டைகள், கஞ்சா ஆகியவற்றை பறிமுதல் செய்து சட்டப்படி நடவடிக்கை எடுத்தனர்.

# துரியோதனன் படுகளம் தத்துரூபமாக நடித்துக் காட்டிய கூத்து கலைஞர்கள்



செங்கல்பட்டு, மே, 17 –

செங்கல்பட்டு, மாவட்டம், மதுராந்தகம் அடுத்துள்ள கள்ளபிரான்புரம் கிராமத்தில், திரௌபதி அம்மன் அக்னி பிரம்மோற்சவம் விழாவானது வெகு விமர்சையாக நடைபெறுவது வழக்கம்.

அந்த வகையில், இந்த ஆண்டு திரௌபதி அம்மன் அக்னி பிரம்மோற்சவ விழாவை, முன்னிட்டு கடந்த மாதம் 26 ஆம் தேதி கொடி ஏற்றத்துடன் அக்னி பிரம்மோற்சவ திருவிழா துவங்கியது. இதனை ஒட்டி தினமும் மகாபாரத சொற்பொழிவும், கவி சொற்பொழிவும் நடைபெற்று வந்தது.

அதேபோன்று இந்த மாதம் மூன்றாம் தேதி முதல் தினமும் இரவு மகாபாரத கூத்து திருவிழாவும் நடைபெற்று வந்தது. தினமும் இரவு நடைபெற்று வந்த பாரத கூத்து விழாவில் ஏராளமான கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

நேற்று விழாவின் முக்கிய அம்சமாக கருதப்படும், துரியோதனன் படுகளம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் புராண கதைகளில் வரும் அர்ஜுனன், பீமன் மற்றும் துரியோதனன் ஆகிய வேடங்களை அணிந்து வந்த கூத்து கலைஞர்கள் வீதிகளில் கூத்தாடிக் கொண்டே, இதிகாச வரலாற்றை மக்கள் முன் நடித்துக் காட்டினர். இதனைத் தொடர்ந்து பீமன் வேடமிட்ட கூத்து கலைஞர், மிக பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டிருந்த துரியோதனன் பொம்மை மீது ஏறி அமர்ந்து தொடையில் பீமன் அடிப்பது போன்று அடித்து தத்துரூபமாக நடித்துக் காட்டினார்.

இந்த விழாவில் ஏராளமான பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து மாலை தீமிதி திருவிழாவும் நடைபெறுகின்றது

# ரூ.26 லட்சத்து 50 ஆயிரம் தொகையில் 10 ஊராட்சிகளுக்கு மூன்று சக்கர மின்கலன் வண்டிகள்: எம்எல்ஏக்கள் டி.ஜே.கோவிந்தராஜன், ஆ.கிருஷ்ணசாமி வழங்கினர்



ஊத்துக்கோட்டை, மே, 17 –

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், கோடுவெளி, தண்டலம், பெரியபாளையம், கன்னிகைப்பேர், தாமரைப்பாக்கம், கன்னிகாபுரம், இலட்சிவாக்கம், ஆத்துப்பாக்கம், காக்கவாக்கம், ஏனம்பாக்கம் உள்ளிட்ட பத்து ஊராட்சிகளுக்கு தலா ரூ.26,500 தொகையில் 15-ம் நிதிக்குழு மானியம் மற்றும் தூய்மை பாரத இயக்கம் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.26 லட்சத்து 50 ஆயிரம் தொகையில் மூன்று சக்கர மின்கலன் வண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, எல்லாபுரம் ஒன்றிய தலைவர் வடமதுரை கே.ரமேஷ் தலைமை தாங்கினார். எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான பி.ஜே.மூர்த்தி, துணை தலைவர் வக்கீல் கே.சுரேஷ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், சத்தியமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே. கோவிந்தராஜன், மாநில ஆதிதிராவிட நலக்குழு செயலாளரும், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் கலந்து கொண்டு பத்து ஊராட்சிகளுக்கு மூன்று சக்கர மின்கலன் வண்டிகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் கே.வி. லோகேஷ், ஆ.சத்தியவேலு, வக்கீல்கள் எ.சீனிவாசன், முனுசாமி, வடமதுரை அப்புன், வெங்கல் வி.ஜே. சீனிவாசன், கோடுவெளி குமார், தாமரைப்பாக்கம் கீதா துளசிராமன், கன்னிகைப்பேர் காயத்ரி உதயகுமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் வட்டார வளர்ச்சி அலுவலக மேலாளர் உதயசங்கர் நன்றி கூறினார்.

# சென்னையில் அரியலூர் மாவட்ட ஊராட்சி செயலாளர்கள் தொடர் காத்திருப்பு போராட்டம்



அரியலூர், மே.17-

சென்னையில் அரியலூர் மாவட்ட ஊராட்சி செயலாளர்களின் தொடர் காத்திருப்பு போராட்டம் நடைபெறுகிறது.

இது பற்றி தமிழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் அமைப்பின் அரியலூர் மாவட்ட நிர்வாகி, திருநாவுக்கரசு வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாடு ஊராட்சி செயலர்கள் அனைவரும் நடத்தும் தொடர் காத்திருப்பு போராட்டம், 15.05.2023 முதல், சென்னை பனகல் மாளிகை முன்பு நடைபெற்று வருகிறது. இதில் அரியலூர் மாவட்ட ஊராட்சி செயலர்கள் சங்கத்தின் சார்பில், மாவட்ட தலைவர் ம.செந்தில்குமார், பொருளாளர் த.முத்து, க.திருநாவுக்கரசு, ப.அழகுவேல், மா.தமிழரசன், உள்ளிட்ட 175 நபர்கள், அரியலூர் மாவட்டம் சார்பில் கலந்து கொண்டுள்ளனர். ஊராட்சி செயலாளர்களுக்கு கருவூலம் மூலம் ஊதியம் வழங்குதல், பணி விதி அரசாணை வெளியிட வேண்டும், வட்டாரத்திற்குள் மூன்று ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே பணி மாறுதல் வழங்க வேண்டும், அரசு சலுகைகள் அனைத்தும் வழங்க வேண்டும், காலி பணியிடங்களை தேர்வு ஆணையம் மூலம் நிரப்ப வேண்டும், ஒய்வு ஊதிய திட்டம் செயல்படுத்த வேண்டும் போன்றவற்றுக்காக அரசாணைகள் வெளியிட கோரி, மாநில அளவில் மேற்கண்ட தொடர் காத்திருப்பு போராட்டம் நடைபெறுகிறது, இவ்வாறு இதில் கூறப்பட்டுள்ளது.

# நீலகிரியில் தேர்வு எழுத ஆசிரியர்கள் உதவிய விவகாரம் நிறுத்தி வைக்கப்பட்ட 32 மாணவர்களின் தேர்வு முடிவு வெளியீடு

ஊட்டி,மே.17-

நீலகிரி மாவட்டம் மஞ்சூர் அருகே சாம்ராஜ் அரசு உதவி பெறும் பள்ளி உள்ளது, இந்த பள்ளியில் கடந்த மார்ச் மாதம் 27-ந்தேதி பிளஸ்-2 கணித தேர்வு நடந்தது. அப்போது தேர்வு எழுதிய சில மாணவர்களுக்கு, கண்காணிப்பு பணியில் இருந்த ஆசிரியர்கள் விடை எழுத உதவியதாக புகார் எழுந்தது, அதன்பேரில் நீலகிரி மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி முனியசாமி தலைமையிலான கல்வி அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். பள்ளியில் இருந்த சி.சி.டி.வி. காட்சிகள் ஆய்வு செய்யப்பட்டது. இதில் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் தேர்வு எழுத உதவிய காட்சிகள் பதிவாகி இருந்தன. அதன்பேரில் அறை கண்காணிப்பாளராக பணியாற்றிய ராம்கி, மூர்த்தி, முதன்மை கண்காணிப்பாளராக பணியாற்றியராதாகிருஷ்ணன், வழித்தட அலுவலராக பணியாற்றிய சீனிவாசன் மற்றும் செந்தில் ஆகிய 5 பேர் சஸ்பெண்டு செய்யப்பட்டனர்.

கடந்த சில தினங்களுக்கு பிளஸ்-2 தேர்வு வெளியிடப்பட்டது. அப்போது அந்த பள்ளியில் தேர்வு எழுதிய 34 மாணவர்களின் தேர்வு முடிவுகள் மட்டும் நிறுத்தி வைக்கப்பட்டது. இதனால் மாணவர்களும், அவர்களது பெற்றோரும் அதிர்ச்சி அடைந்தனர். தேர்வு முடிவு நிறுத்தி வைக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் சஸ்பெண்டான 5 ஆசிரியர்களிடம் முதன்மை கல்வி அதிகாரி முனியசாமி நேரில் சென்று விசாரணை மேற்கொண்டனர். இந்த விசாரணை அறிக்கை விவரங்கள் சென்னையில் உள்ள தேர்வுத்துறை அலுவலகத்துக்கு அவர் அனுப்பி வைத்தனர். இந்தநிலையில் நேற்று மாணவர்களின் பெற்றோர் ஊட்டி கலெக்டர் அலுவலகம் வந்துமுற்றுகையிட்டனர். தேர்வு முடிவு அறிவிக்கப்படாததால் தங்கள் குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும், எனவே உடனடியாக தேர்வு முடிவை அறிவிக்க வேண்டும் எனவும் கூறி மனு கொடுத்தனர். அவர்களிடம் முதன்மைகல்வி அதிகாரி முனியசாமி நேரில் வந்து பேச்சுவார்த்தை நடத்தி சமாதானப்படுத்தினார்.

அப்போது அவர் விசாரணை அறிக்கை சென்னைக்கு அனுப்பப்பட்டு உள்ளதாகவும், இன்னும் 2 நாட்களில் அதற்கான முடிவு தெரியவரும் எனவும் கூறினார். அவர் தெரிவித்தபடி தேர்வு நிறுத்தி வைக்கப்பட்ட 34 மாணவர்களினல் 2 மாணவர்கள் மீதே அதிக சர்ச்சை எழுந்துள்ளது. இதனால் அந்த 2 மாணவர்களின் தேர்வு முடிவுகள் மட்டும் நிறுத்தி வைக்கப்பட்டு மற்ற 32 மாணவர்களின் தேர்வு முடிவுகள் விரைவில் வெளியிடப்படும் என கல்வி அதிகாரிகள் தெரிவித்து இருந்தனர். அதன்படி 32 மாணவர்களின் தேர்வு முடிவுகள் நேற்று வெளியானது, இதில் 31 பேர் தேர்ச்சி பெற்றனர், 1 மாணவர் மட்டும் தேர்ச்சி பெறவில்லை.

### நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த

# அரசு பள்ளி மாணவருக்கு ரூ.50,000 கல்வி உதவித் தொகை முன்னாள் அரசு பள்ளி மாணவர்கள் வழங்கினர்



திருவள்ளூர், மே, 17 -

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் லோகேஷ் என்ற மாணவர் பிளஸ் டு படித்துள்ளார். இந்த மாணவர் மருத்துவ படிப்பிற்கான நீட் தேர்வில் தமிழக அரசின் 7.5 சதவீத இட ஒதுக்கீட்டில் திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ் மருத்துவம் படிக்க சேர்ந்தார்.

இந்நிலையில் ஆரணி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1993-ம் ஆண்டு படித்த பழைய மாணவர்களின் சந்திப்பு நிகழ்ச்சி ஆரணி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. நீட் தேர்வு மூலம் மருத்துவ படிப்பு படிக்கும் லோகேஷ் கல்வி செலவுக்காக முன்னாள் மாணவர்கள் சார்பாக ரூ.50,000 வழங்கப்பட்டது. மேலும் பள்ளியின் ஆசிரியர் சார்பாக வாட்ச் ஒன்று வழங்கப்பட்டது.

நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு ஆரணி பேரூராட்சி முன்னாள் உறுப்பினரும், முன்னாள் பள்ளி மாணவருமான கு.கரிகாலன் தலைமை தாங்கினார். ஆரணி என்.எம். சுரேஷ், கொசவன் பேட்டை மதுபாபு, பெரியபாளையம் சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் ஆசிரியர் விஜயன் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினார். இந்நிகழ்ச்சியில் கேரள மாநிலத்தில் இருந்து வந்த முன்னாள் மாணவி தேவி மற்றும் இந்திரா, பிரபாவதி, ஆசிரியை சாருமதி, ஸ்ரீகர்குமார், பாஸ்கர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு ஒருவரை ஒருவர் சந்தித்து நலம் விசாரித்துக் கொண்டனர்.

பள்ளி வளர்ச்சிக்கும், பள்ளிக்குத் தேவையான உபகரணங்களையும், இப்பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு மாலை நேரத்தில் ஊட்டச்சத்து மிக்க தின்பண்டங்களை வழங்குவது குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை முன்னாள் மாணவர்கள் மேற்கொண்டனர். மதியம் அனைத்து முன்னாள் மாணவர்களும் ஒன்றாக அமர்ந்து அறுசுவை உணவை உண்டனர். முடிவில் முன்னாள் மாணவரும், ஓய்வு பெற்ற கூட்டுறவு சங்க செயல் அதிகாரியுமான கருணாகரன் நன்றி கூறினார்.



▶ காரைக்கால் சேம்பர் ஆஃப் காமர்ஸ் புதிய தலைவராக தேர்வு செய்யப்பட்டு இருக்கும் அறிவழகனின் பிறந்த நாளன்று சட்ட மன்ற உறுப்பினர்கள் ஏ.எம்.எச்.நாஜிம், நாக தியாகராஜன், ஆகியோர் நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர். சேம்பர் ஆஃப் காமர்ஸ் இணைச் செயலாளர் ஜி.ராஜ்மோகன் உடன் இருந்தார்.



▶ காரைக்கால் மாவட்டம், விழுதியூர் அரசு உயர் நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டியை நிரவி திருப்பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாக தியாகராஜன் வழங்கினார். இந்நிகழ்வில் பள்ளி தலைமையாசிரியர் சுரேஷ்ராஜு மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், மாணவர்கள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர். மொத்தம் 33 மாணவ, மாணவிகளுக்கு விலை இல்லா சைக்கிள்கள் வழங்கப்பட்டன.



▶ அனைத்து கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர்களுடன் ஆட்சியரகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் ஒரு பகுதியாக காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் திருநள்ளாற்றில் பொதுமக்கள் நடமாடும் சாலையில் கொட்டிய குப்பைகளை மாலைக்குள் அகற்றுமாறு திருநள்ளாறு கொம்யூன் பஞ்சாயத்து ஆணையருக்கு உத்தரவிட்டதின் அடிப்படையில் அவ்விடத்தை ஆட்சியர் பார்வையிட்டார். மேலும் ஆணையரிடம் இது போன்று பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் குப்பைகளை கொட்டி கொளுத்தக் கூடாது என்றும், உடனடியாக குப்பைகளை அப்புறப்படுத்துமாறும் உத்தரவு பிறப்பித்தார். உடன் திருநள்ளாறு கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் கலந்து கொண்டார்.

# நாமகிரிப்பேட்டையில் 1,770 மஞ்சள் மூட்டைகள் ரூ.80 லட்சத்துக்கு ஏலம் போனது



நாமக்கல் , மே, 17 -

ராசிபுரம் மஞ்சள் ஏலம் ராசிபுரம் ஆர்.சி.எம்.எஸ். சங்கத்தின் கிளை வளாகம் நாமகிரிப்பேட்டையில் உள்ளது. இங்கு நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்திற்கு நாமகிரிப்பேட்டை, அரியாக்கவுண்டம்பட்டி, ஒடுவன்குறிச்சி, தொப்பப்பட்டி, புதுப்பட்டி, மெட்டாலா, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் மஞ்சளை ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

ஏலத்தில் ஒடுவன்குறிச்சி, நாமகிரிப்பேட்டை, ஈரோடு, சேலம், ஆத்தூர் போன்ற பல்வேறு இடங்களில் இருந்து வியாபாரிகள் வந்திருந்து மஞ்சள் ஏலம் எடுத்தனர். இந்த ஏலத்தில் விரலி ரகம் 1,200 மூட்டைகளும், உருண்டை ரகம் 500 மூட்டைகளும், பனங்காலி ரகம் 70 மூட்டையும் கொண்டு வரப்பட்டு இருந்தன. ரூ.80 லட்சத்துக்கு விற்பனை இதில் விரலி ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.6 ஆயிரத்து 12 முதல் அதிகபட்சமாக ஒரு குவிண்டால் ரூ.8 ஆயிரத்து 349-க்கும், உருண்டை ரகம் குறைந்தபட்சம் ரூ.4 ஆயிரத்து 12-க்கும், அதிகபட்சமாக ஒரு குவிண்டால் ரூ.7 ஆயிரத்து 299-க்கும், பனங்காலி ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.8 ஆயிரத்து 509-க்கும், அதிகபட்சமாக ஒரு குவிண்டால் ரூ.13 ஆயிரத்து 602-க்கும் ஏலம் விடப்பட்டது.

இந்த ஏலத்தில் 1,770 மஞ்சள் மூட்டைகள் ரூ.80 லட்சத்திற்கு ஏலம் போனது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் குறைந்த அளவில் மஞ்சள் மூட்டைகள் ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. ஆனால் விலை கடந்த வாரத்தைவிட சற்று கூடுதலாக இருந்தது.

# ஆவுடையார்கோவிலில் முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டத்தில் சமையலருக்கு பயிற்சி



ஆவுடையார்கோவில், மே.17-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் யூனியன் அலுவலகத்தில் நேற்று தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவுவழங்கும்திட்டத்தில்14 மையங்களுக்கு 42 சமையல் உதவியாளர்கள் பணிக்கு தேர்வானவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியை ஆவுடையார்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர் சீனிவாசன் குத்துவிளக்கு ஏற்றிதுவக்கி வைத்தார், நிகழ்ச்சியில் ஆவுடையார்கோவில் ஒன்றிய குழு துணை உறுப்பினர் பிரியா குப்பு ராஜா, ஒன்றிய குழு உறுப்பினர்கள் சுந்தர பாண்டியன், செந்தில்குமரன் .துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.சத்துணவு உதவி திட்ட அலுவலர்கள், வட்டார இயக்க மேலாளர்கள், மற்றும் ஒருங்கிணைப் பாளர்கள்உள்பட 50க்கும் மேற்பட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் துரை சார்ந்த அதிகாரிகள் அதிகாலையில் பள்ளிக்கு செல்கின்ற மாணவ, மாணவிகளுக்கு எவ்வாறு காலை உணவு தயார் செய்வது, மாணவ மாணவிகளை எவ்வாறு பராமரிப்பது உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் கற்பிக்கப்பட்டது, பயிற்சியானது நேற்று தொடங்கி 30. 5. 2023 வரை வழங்கப்படுவதாக கூறப்படுகிறது.

# கள்ளச் சாராய பிரச்சினையில் பொறுப்பை தட்டிக் கழிக்க கூடாது ஆளுநர் தமிழிசை



புதுச்சேரி , மே, 17 -

"கள்ளச் சாராயம் விற்பதை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்" என்று ஆளுநர் தமிழிசை தெரிவித்துள்ளார்.

புதுச்சேரிதுணைநிலை ஆளுநர் மாளிகையில் சிக்கிம் மாநில விழா நேற்று கொண்டாடப்பட்டது. ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கலந்து கொண்டு பேசினார். இவ்விழாவில் சிக்கிம் மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "சிக்கிம் மாநிலத்தில் இருந்து நம்முடைய மாநிலத்துக்கு படிக்க அல்லது தொழில் ரீதியாக குடியேறி, அதன் மூலம் இங்கு அவர்கள் பணியாற்றும் போது, இந்த மாநிலத்தின் வளர்ச்சியில் அவர்களது பங்கும் இருக்கிறது. அதே நேரத்தில் நாம் எல்லோரும் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள். வேவ்வேறு மாநிலத்தை சேர்ந்தவர்கள் என்றாலும், ஒற்றுமை உணர்வை ஏற்படுத்துகின்ற எல்லா மாநில தினங்களும் கொண்டாடப்படும். அந்த வகையில் சிக்கிம் மாநில தினம் கொண்டாடப் பட்டுள்ளது. அடுத்ததாக தெலங்கானா மாநிலதினம் கொண்டாடப்படும்.

மரக்காணத்தில் கள்ளச் சாராயம் அருந்தி 14 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் மிகவும் வருத்தம் தரக்கூடிய விஷயம். இது விழுப்புரத்தில் நடந்த ஒரு கரும்புள்ளி என்றே சொல்ல வேண்டும். முதலில் இத்தகைய கள்ளச்சாராயம் காய்ச்சி, விற்பதை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும். கள்ளச் சாராயம் உடம்புக்கு எவ்வளவு கேடு என்பதை, அதை தயாரிப்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். கள்ளச் சாராயம் அருந்தி உயிர் வாழ்ந்தால் கூட கண் பார்வை போய்விடும். ஏதோ சிறிது நேரம் போதைக்காக வாழ்க்கையை இழக்க வேண்டாம். எவ்வளவு உயர்தர சிகிச்சை கொடுத்தாலும் சிலரை காப்பாற்ற முடியாத சூழ்நிலை மனதுக்கு வருத்தமான ஒன்று. எனவே கள்ளச் சாராயத்தை கட்டுப்படுத்த வேண்டும். இதை எடுத்துக் கொள்பவர்கள் கூட, தயவு செய்து இனிமேல் இத்தகைய தவறான பாதைக்குச் செல்ல வேண்டாம் என கோரிக்கை வைக்கிறேன்.

புதுச்சேரியில் போதைப் பொருட்கள், கள்ளச் சாராயம் என எல்லாவற்றையும் கட்டுப்படுத்துவதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனால் இங்கிருந்து சென்றது, அங்கிருந்து சென்றது என சொல்லி நம்முடைய கடமை, பொறுப்பை தட்டிக் கழிக்க கூடாது. கள்ளச் சாராயம் எந்த பகுதியிலிருந்து வந்தாலும், அது கட்டுப்படுத்தப்பட வேண்டும். கள்ளச் சாராயம் புதுச்சேரியில் இருந்து வந்தது என்று சொல்லி, சில பொறுப்புகள் எங்களுக்கு இல்லை என்று எந்தப் பகுதியை சேர்ந்தவர்களும் சொல்லிவிட முடியாது. இதில் மக்களும் பொறுப்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டும்" என்றார்.

# ஹஜ் புனித யாத்திரை செல்லும் பயணிகளுக்கு தடுப்பூசி செலுத்தும் முகாம்



காரைக்கால், மே, 17 -

காரைக்கால் அரசு நலவழித்துறை மூலம் ஹஜ் பயணிகளுக்கு பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசி செலுத்தும் முகாம் காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் நடைபெற்றது.

முகாமில் சுமார் 28 நபர்களுக்கு இளம்பிள்ளை வாதம், சொட்டு மருந்து, மெனிஞ்சோகாக்கல் தடுப்பூசி மற்றும் 60 வயசுக்கு மேற்பட்டவர்களுக்கு இன்ஃப்ளுயன்ஸா தடுப்பூசியும் வழங்கப்பட்டது. அனைவருக்கும் இலவச மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டது.

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் முகாமினை தொடங்கி வைத்து பயணிகளுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

இம்முகாமில் நலவழித்துறை துணை இயக்குனர் டாக்டர் இரா.சிவராஜ்குமார், நோய் தடுப்பு திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர். தேனாம்பிகை, மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் கண்ணகி உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி மதன்பாபு, நோய் தடுப்பு தொழில்நுட்ப உதவியாளர் சீ.சேகர், புதுச்சேரி மாநில ஹஜ் கமிட்டி தலைவர் இஸ்மாயில் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இச்சிறப்பு முகாம் தடுப்பூசி பிரிவு தொழில் நுட்ப உதவியாளர் சேதுபதி தலைமையில், சுகாதார ஆய்வாளர்கள் ஆண்ட்ரூஸ், சிவவடிவேல், சுகாதார உதவியாளர்கள் மற்றும் கிராமப்புற செவிலியர்கள் மூலம் ஏற்பாடுகள் செய்து இருந்தனர்.

# தமிழக கள்ளச்சாராயம் மரணத்தை தொடர்ந்து புதுச்சேரி மாநில அரசு சார்பில் காரைக்காலில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆய்வு



காரைக்கால், மே, 17 -

தமிழகத்தில் கள்ளச்சாராயம் அருந்தி பல பேர் உயிரிழந்த நிலையில் புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக துணை மாவட்ட ஆட்சியர் ஜான்சன் தலைமையில் கொண்ட குழு காரைக்கால் எல்லை பகுதிகளான வாஞ்சூர் மற்றும் பூவம் உள்ளிட்ட பகுதிகளிலும், மற்றும் பல்வேறு சாராயக்கடை, கள்ளுக்கடை, மதுபார் போன்றவற்றிலும் அதிரடி ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில் காலாவதியான மது வகைகள் விற்கப்படுகிறதா, விலை பட்டியலில் உள்ளது போன்று விற்கிறார்களா அல்லது விலை அதிகமாக விற்கப்படுகிறதா என்பது குறித்தும் ஆய்வு செய்த துணை ஆட்சியர் கடை உரிமையாளர்களிடம் கடைக்கு வெளியே விலைப்பட்டியல் எழுதிவைக்கும் படியும் அறிவுறுத்தினார்.

கடை உரிமையாளர்களிடம் மொத்தமாக மது விற்கக்கூடாது என்றும் அறிவுறுத்தினார். மேலும் பிளாஸ்டிக் பொருட்கள் சட்டப்படி தடை செய்யப்பட்ட பொருட்களை இங்கே விற்கக்கூடாது எனவும் அறிவுறுத்தினார். மீறி விற்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தார். இந்த ஆய்வில் வட்டாட்சியர்கள் மதன்குமார், செல்வநாதன் உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.

# "ஐபிஎல் ஏலத்தில் வருண் சக்கரவர்த்தியை மிஸ் செய்தது எங்களுக்கு வேதனையே" ; ஸ்டீபன் ஃபிளெமிங்



சென்னை ,மே, 17 -

ஐபிஎல் ஏலத்தில் சுழற்பந்து வீச்சாளர் வருண் சக்கரவர்த்தியை மிஸ் செய்தது தங்களுக்கு இன்னும் வேதனை தருவதாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளர் ஸ்டீபன் ஃபிளெமிங் தெரிவித்துள்ளார். கொல்கத்தா அணியுடனான போட்டிக்கு பிறகு அவர் இதனை தெரிவித்திருந்தார்.

வருண் சக்கரவர்த்தி, சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் நெட்பவுலராக சில காலம் சென்னை வீரர்களுக்கு பந்து வீசி உள்ளார். அப்போது அவர் வீசும் பந்தை எதிர்கொள்ள சென்னை வீரர்கள் திணறியதாகவும் ஃபிளெமிங் தெரிவித்துள்ளார். இதில் சென்னை அணியின் கேப்டன் தோனியும் ஒருவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஏலத்தில் வருணை மிஸ் செய்தது எங்களுக்கு இன்னும் வேதனை தருகிறது. நெட் பவுலராக அவர் சென்னை பேட்ஸ்மேன்களை இம்சித்தார். ஆனால், ஏலத்தில் அவரை எங்களால் தக்க வைக்க முடியவில்லை. அதற்கு காரணம் என்னவென்றால் மற்ற அணிகளில் உள்ள தமிழ்நாட்டை சேர்ந்த வீரர்கள் அவரது திறன் குறித்து நன்கு அறிந்திருந்தது தான். அதனால் அவர் குறித்த ரகசியத்தை எங்களால் காக்க முடியாமல் போனது. அவர் ஒரு பவுலிங் அஸ்திரம்" என ஃபிளெமிங் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தமிழ்நாட்டை சேர்ந்த வீரர்கள் இல்லாத சென்னை சூப்பர் கிங்ஸ் அணி குறித்து கண்டங்கள் எழுப்பப்பட்டன. இது குறித்து தமிழ்நாடு சட்டப்பேரவையில் பேசப்பட்டது. இந்த சூழலில் ஃபிளெமிங், வருண் சக்கரவர்த்தி குறித்து தங்கள் அணியின் விருப்பம் மற்றும் திட்டம் என்னவாக இருந்தது என்பதை பகிர்ந்துள்ளார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# அமைச்சரவையிலிருந்து செஞ்சி மஸ்தான், செந்தில் பாலாஜியை நீக்கவும்

# புதுக்கோட்டை உள்ளிட்ட 16 மாவட்ட கலெக்டர்கள் பணியிட மாற்றம்





# கள்ளச்சாராய குற்றவாளி அம்மாவாசைக்கு நிவாரணம் ஈபிஎஸ் கொந்தளிப்பு


| சென்னை / புதுக்கோட்டை | 17.05.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

17.05.2023 புதன்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்



**தீரேந்திர வர்மா** , இந்தியக் கவிஞர், மொழியியல் ஆய்வாளர் (பி.1897) (இ.1973)



**பி. சாந்தகுமாரி** , தென்னிந்திய நடிகை, பாடகி (பி.1920)



**பி. எஸ். சந்திரசேகர்** , இந்தியத் துடுப்பாளர் (பி.1945)

## இன்றைய நினைவு நாள்



**நகுலன்** , தமிழக எழுத்தாளர் (பி.1921) (இ.2007)



**சி. கோவிந்தன்** , தமிழறிஞர், புலவர் (இ.2014)



**கி. ராஜநாராயணன்** , தமிழக எழுத்தாளர் (பி.1923) (இ.2021)

## உலக தகவல் சமூக நாள்

## உலக உயர் இரத்த அழுத்தம் நாள்